# வழியை மறித்திருந்த அந்நியப் பிரஜைகளின் கடைகள் அப்புறப்படுத்தப்பட்டன



கோலாலம்பூர், ஜூலை 19-

தலைநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில் வழிகளை மறித்து அந்நியர்களுக்குச் சொந்தமான சில கடைகளை கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத் தரப்பினர் அப்புறப்படுத்த பொருட்களைப் பறிமுதல் செய்தனர்.

டேசா பாண்டான், ஜாலான் துன் ரசாக், லோரோங் ராஜா மூடா அப்துல் அஸிஸ், ஜாலான் ஜெமுர், ஜாலான் ராஜா அலாங் ஆகிய பகுதிகளில் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தித்திவங்சா கிளை கோலாலம்பூர் மாநகர் மன்ற அலுவலகத் தரப்பினரும் அமலாக்கப் பிரிவினரும் இந்த அதிரடிச் சோதனையை மேற்கொண்டனர். அதில் மேஜைகள், பிளாஸ்டிக் நாற்காலிகள், கூடாரங்கள் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 2016 (கூட்டரசுப் பிரதேச கோலாலம்பூர்) வியாபார உரிமம் தொடர்பிலான சிறிய சட்டம், 1974 சாலை, கட்டடச் சட்டத் தின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் செராஸ், தாமான் மெஹார்ஜாவில் உள்ள ஊராட்சி டெப்போவிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

மேலும் கூட்டரசுப் பிர தேசம் கோலாலம்பூரில் உள்ள 11 நாடாளுமன்றத் தொகுதிகளில் தொடர் கண்காணிப்பு, அமலாக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் மாநகர் தரப்பு தமது அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது.